9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

167. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

168. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சி வகுப்பு 1.1 நகர்ப்புற அமைப்பு பணி விதிகளை உருவாக்குவது தொடர்பாக ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 9-7-980 ஆம் தேதியிடப் பெற்ற 1039-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

169, சென்னையிலுள்ள திருவாளர்கள் ராஜ் லூப்ரிகன்ட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கு இருப்பிலிருந்து மின்மாற்றி எண்ணெயினை விற்பனை செய்வதன் மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து சென்னை இந்தியன் எண்ணெய்க் கழகத்திற்கு விலக்களிப்பது மற்றும் ராஜ்லூப்ரிகன்ட்ஸ் நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்பனை செய்யும் 450 கிலோ லிட்டர் மின்மாற்றி எண்ணெ மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் வணிகவரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 2-12-1980 ஆம் தேதியிடப் பெற்ற 1283 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

170. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையிலிருந்து 87 ஆம் குறிப்பினை நீக்குவது மற்றும் அனைத்து ஆயத்த ஆடைகள் மீது பல்முனை வரிவிதிப்பது குறித்தும் வணிகவரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 24/11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1243 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

171. குலசேகரம் அங்காடியின் முகவரியினை மாற்றுவது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 7-10-1976ஆம் தேதியிடப் பெற்ற II (2)/AG/5768/76ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1.12.1980 ஆம் தேதியிடப்பெற்ற 104790/AM./11/80-2ஆம் அரசுக் கடித எண்ணில் வெளியான அறிவிப்பு, (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)

ஆ, அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை